

சிவகங்கை மாவட்டம் கல்லலில் கிழக்கு ஒன்றியக் கழகத்தின் சார்பில் அரண்மனை சிறுவயலில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு பொதுக்கூட்டத்தில் நலத்திட்ட உதவிகளை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார். உடன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திண்டுக்கல் ஐ.லியோனி, கல்லல் கிழக்கு ஒன்றியச் செயலாளர் நா.நெடுஞ்செழியன் உட்பட நிர்வாகிகள் உள்ளனர்.

### நாங்குநேரி மாணவர் - தங்கை வெட்டப்பட்ட விவகாரம்!

# கைது செய்யப்பட்ட மாணவரின் தந்தை பா.ஜ.க. உறுப்பினர்!

## அண்ணாமலை குற்றச்சாட்டுக்கு ஆவுடையப்பன் பதில்!

நெல்லை, ஆக. 15-

"நாங்குநேரி மாணவர் - தங்கை வெட்டப்பட்ட விவகாரத்தில் கைது செய்யப்பட்ட மாணவரின் தந்தை பா.ஜ.க.வின் உறுப்பினர்" என்று நெல்லை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அண்ணாமலைக்கு பதிலடி கொடுத்துள்ளார்.

இதுகுறித்து, அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி பள்ளி மாணவர்கள் மோதல் சம்பவத்திற்கு காரணமானவர்கள் தி.மு.கவைச் சேர்ந்தவர்கள் என ஒரு பொய்யான குற்றச்சாட்டை மாநில பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை 12.08.2023 அன்று விளாத்திகுளத்தில் பேசியுள்ளார். ஆனால் உண்மையில் காவல் துறையால் கைது செய்யப்பட்ட மாணவன் சுப்பையா என்பவரின் தந்தை



முருகன் என்பவர் பா.ஜ.க.வின் தீவிர உறுப்பினராக இருந்து வருகிறார். மேலும் நாங்குநேரி 4வது வார்டு தலைவராக பணியாற்றியுள்ளார்.

அதுமட்டுமல்லாது பாரதிய ஜனதா முன்னணி தலைவரிடம் நெருங்கிய பழகி உள்ளார். இது அந்த பகுதி மக்கள் அனைவருக்கும் தெரிந்தது. ஆனால் இதையெல்லாம் மறைத்து விட்டு தி.மு.கவிற்கும், தி.மு.க. நிர்வாகிகளின் பெயருக்கும் களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும் நெல்லை மாவட்டத்தில் பொதுமக்களிடம் தி.மு.க. அரசுக்கு இருக்கும் செல்வாக்கை பொறுத்துக் கொள்ள முடியாத வகையில் ஒரு பொய்யான தகவலை அண்ணாமலை குறிப்பிட்டுள்ளார். இது மிகவும் கண்டிக்கத்தக்கது.

நாங்குநேரி வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கின் எதிரி தந்தை முருகன் பா.ஜ.க. உறுப்பினர் அட்டை எண். 3056618106 ஆகும். தெலுங்கானா கவர்னராக இருக்கக்கூடிய திருமதி.தமிழிசை சௌந்தர்ராஜன் தமிழகத்தின் பா.ஜ.க. தலைவராக இருந்தபோது முருகனுக்கு உறுப்பினர் அட்டை 2019ல் வழங்கியுள்ளார். முருகன் தற்போது 2024 வரை பா.ஜ.க. உறுப்பினராக நீடிக்கிறார்.

மேலும் பா.ஜ.க. கட்சியின் மூத்த தலைவர், முன்னாள் அமைச்சர் பொன் ராதாகிருஷ்ணனுடன் இணைந்து தேர்தல் பிரச்சாரம் செய்துள்ள புகைப்படம் மற்றும் உறுப்பினர் அட்டை புகைப்படம் ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளோம். இதையெல்லாம் அண்ணாமலை மறைத்து தி.மு.க. ஒன்றிய செயலாளர் மீது அவதூறு பரப்புவது அருவருக்கத்தக்க செயலாகும்.

இதை நெல்லை கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது. இனிமேல் இது போன்ற நேரங்களில் ஆதாரம் இல்லாத எந்த செய்திகளை வெளியிடுவது ஒரு கட்சியின் தலைவருக்கு அழகு இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு இரா.ஆவுடையப்பன் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### மாணவர்களை ஆண்டுதோறும்

# கொடூரமாக தாக்கி வரும் 'நீட்' எனும் அரக்கன்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, ஆக. 15-

மாணவர்களை ஆண்டுதோறும் 'நீட்' எனும் அரக்கன் கொடூரமாக தாக்கி வருகிறது என 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து 'தினகரன் நாளேடு' தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:-

இந்தியாவில் மருத்துவ படிப்புகளுக்கான நீட் தேர்வு ஒன்றிய பா.ஜ. அரசால் திணிக்கப்பட்டது. மாநில பட்டியலில் இருந்த கல்வியை, ஒத்திசைவு பட்டியலுக்கு மாற்றியதோடு, மாநில அரசுகளின் அதிகாரங்களை மெல்ல மெல்ல பறிப்பதும் பா.ஜ. ஆட்சியில் அடிக்கடி அரங்கேறி வருகிறது. தமிழ்நாட்டு மாணவர்கள் பெரும்பாலும் மாநில பாடத்திட்டத்தில் பயின்று வருகின்றனர். ஆனால் சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தில் நீட் தேர்வை எழுத வேண்டும் என்கிற கட்டாய சூழலை ஒன்றிய அரசு திணித்தது. இதனால் அனிதா உள்ளிட்ட அப்பாவி மாணவிகளின் உயிர்பலியும் நடந்தது. மாநில பாடத்திட்டத்தில் மிகச்சிறந்த சாதனை படைக்கும் மாணவர்கள், நீட் என்னும் அரக்கனால் கொடூரமாக தாக்கப்படுவது ஆண்டுதோறும் நடந்து வருகிறது.




நீட் தேர்வுக்கு விலக்கு அளிக்கும் மசோதாவும் தொடர்ந்து சோதனைக்குள்ளாக்கப் பட்டு வருகிறது. சமீபத்தில் நீட் தேர்வு குறித்து கருத்து தெரிவித்த ஆளுநர் ரவி, 'நான் நீட் தேர்வு ரத்துக்கு ஒருபோதும் அனுமதி அளிக்க மாட்டேன். கல்வி பொதுப்பட்டியலில் உள்ளது. நீட் தேர்வை ரத்து மசோதா குடியரசுத் தலைவரிடம் உள்ளது.' என வெளிப்படையாக தெரிவித்துள்ளார். ஆளுநர் தனது அதிகாரத்தை தாண்டி போய்விட்ட ஒரு மசோதா குறித்து இப்போது பேசி சர்ச்சையை மீண்டும் கிளப்பியுள்ளார். அதிரடி அரசியலுக்கு பேர் போன ஆளுநர் மீண்டும் நீட் தேர்வை பொதுவெளியில் விவாத பொருளாக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளார்.

தமிழ்நாட்டில் நீட் தேர்வை ரத்து செய்திட தி.மு.க. மேற்கொண்ட முயற்சிகள் கணக்கில் அடங்காதவை. 2010ம் ஆண்டு நீட் தேர்வு முன் மொழியப்பட்டபோதே, அப்போதைய முதல்வர் கலைஞர் அதை கடுமையாக எதிர்த்தார். நீட் தேர்வை கண்டித்து தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. சார்பில் பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டன. அதையும் மீறி அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில், அவர்களது மென்மையான போக்கால் நீட் தேர்வு அறிமுகம் செய்யப்பட்டது. நீட் தேர்வுக்கு எதிராக தமிழகம்தான் முதன்முதலில் வழக்கு போட்டது. மாணவர்களின் உயிரை பறிக்கும் பலி பீடமாக கருதப்படும் நீட் தேர்விற்கு விலக்கு என சட்டசபையில் நிறைவேற்றப்படும் ஒரு மசோதாவுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்பது நடைமுறை. ஆனால் வீம்பு செய்ய தற்கென்றே தமிழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஆளுநர் ரவி தொடர்ந்து நீட் தேர்வை தனது அதிகாரத்திற்கான பகடைக்காயாக பயன்படுத்தி வருகிறார். ஆளுநர் மூலம் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ள நீட் விலக்கு மசோதா, உள்துறையின் பரிசீலனையில் உள்ளது. உள்துறை அமைச்சகம் ஆயுஷ்துறை, கல்வி மற்றும் சுகாதார துறைகளிடம் தொடர்ந்து சில கேள்விகளுக்கு விளக்கம் கேட்டு வருகிறது. ஒவ்வொரு முறையும் தமிழக அரசு அதற்கு தெளிவான விளக்கங்களை அளித்து, நீட் விலக்கை அமல்படுத்த போராடி வருகிறது.

தமிழக அரசின் விளக்கங்களை ஏற்று குடியரசுத் தலைவர் நீட் விலக்கு மசோதாவிற்கு ஒப்புதல் வழங்கும் பட்சத்தில், ஆளுநருக்கு எவ்வித வேலையும் இல்லை. இருப்பினும் நான் கையெழுத்து போட மாட்டேன் என ஆளுநர் மீண்டும் முருங்கை மரம் ஏறுவது பொதுமக்கள் வியப்பில் ஆழ்த்துகிறது. மக்களின் எண்ணங்களுக்கு மதிப்பளிக்க மறுக்கும் ஆளுநர், தமிழ்நாட்டில் அடிக்கடி தானும் இருக்கிறேன் என தற்காலிக பிரச்சினைகளை கிளப்புவது வழக்கம். தற்போது நீட் தேர்வை கையில் எடுத்து கொண்டு குட்டைகளில் மீன் பிடிக்க பார்க்கிறார். தமிழகம் அவரது கருத்துகளை ஒருபோதும் செவிமெடுக்க போவதில்லை.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### உரிய அனுமதி - பாதுகாப்பு உபகரணங்களின்றி

# கழிவு நீரகற்றும் பணிகளில் தூய்மைப் பணியாளர்களை ஈடுபடுத்தக் கூடாது!

## நகராட்சி நிர்வாகம் - குடிநீர் வழங்கல் துறை எச்சரிக்கை!

சென்னை, ஆக. 15 -

முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 22.05.2023 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், கழிவுநீர் தொட்டி சுத்தம் செய்யும் போது ஏற்படும் உயிரிழப்புகளை தடுக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிட்டார்கள். மனிதக் கழிவுகளை அகற்றும் தொழில் புரிவோர் தடுப்பு மற்றும் அவர்களது மறுவாழ்வுச் சட்டம், 2013 மற்றும் தமிழ்நாடு மனிதக் கழிவுகளை அகற்றும் தொழில் புரிவோர் தடுப்பு மற்றும் அவர்களது மறுவாழ்வு விதிகள், 2022 ஆகிய விதிகளின்படி, உயிரிழப்பு மற்றும் விபத்தில்லா தூய்மைப் பணிகளைக் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு மாறுவதை உறுதி செய்யும் முக்கிய நோக்கத்துடன் முதலமைச்சர் அவர்கள் "தூய்மைப் பணியாளர் மேம்பாட்டுத் திட்டத்தை" 09.12.2022 அன்று தொடங்கி வைத்தார்.

அதனடிப்படையில், முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்6, மதுரை மாநகராட்சி மண்டலம்3, புதுக்கோட்டை, பொள்ளாச்சி நகராட்சிகள் மற்றும் சேரன் மாதேவி பேரூராட்சி பகுதிகளில் இத்திட்டத்தில் பயன்பெறும் வகையில் தூய்மைப் பணியாளர் கணக்கெடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டதில் 2,198 தூய்மைப் பணியாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் 28.2.2023 அன்று தலித் இந்திய வர்த்தக மற்றும் தொழிற்சங்கம் (DICCI) அமைப்புடன் இணைந்து சென்னை குடிநீர் வாரியம் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்தத்தின் மூலம் தூய்மைப் பணிகளை மேற்கொள்ள தொழில்நுட்ப உபகரணங்களைக் கொண்டு தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்களின் வாரிசுதாரர்களை தொழில் முனைவோர்களாக மேம்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் சென்னை குடிநீர் வாரியத்தால் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது.

2.1.2023 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை (நிலை) எண்.1 ன்படி, கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் அரசின் உரிமம் பெற்றப் பின்னரே பணிகளை மேற்கொள்ள வேண்டும். அனைத்து கழிவுநீர் அகற்று லாரிகளும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து உரிமம் பெறவேண்டுமென தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சென்னை குடிநீர் வாரியத்தின் மூலம் இதுவரை 313 லாரிகளும், மற்ற உள்ளாட்சி அமைப்புகளில் 1070 உரிமம் பெற்ற லாரி உரிமையாளர்கள் கழிவு நீர்த் தொட்டியிலிருந்து கழிவுநீரை அகற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கழிவு நீரகற்றும் வாகன உரிமையாளர்கள் / ஓட்டுநர்கள் / உதவியாளர்கள் மற்றும் துறை அலுவலர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு, முதற்கட்டமாக கழிவு நீரகற்றும் பணிகளை இயந்திரங்களைக் கொண்டு பாதுகாப்பான முறையில் அகற்றுவதற்கான பயிற்சிகள் சென்னை, கோயம்பத்தூர், மதுரை மற்றும் மறைமலைநகர் ஆகிய இடங்களில் இதுவரை 3064 லாரி உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 17.05.2023 மற்றும் 26.05.2023 ஆகிய இரு தினங்களிலும் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் உள்ள கழிவுநீர் லாரி இயக்குபவர்கள் மற்றும் சாலை போக்குவரத்து அலுவலர்களுடன் கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டது. லாரி உரிமத்தில் அங்கீகரிக்கப்பட்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் கழிவு நீர் உந்து நிலையங்களில் மட்டுமே கழிவுநீர் வெளியேற்றம் செய்யப்பட்டு வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சென்னை குடிநீர் வாரியத்தின் மூலம் உரிமம் பெறாத லாரிகளை ஆய்வு செய்ய சிறப்புக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளது. அதன்படி, சட்டவிரோதமாக உரிமம் பெறாமல் கழிவுநீர்த் தொட்டியிலிருந்து கழிவு நீரை அகற்றினால் முதன் முறை விதிமீறலுக்கு ரூ.25,000/ அபராதமும், இரண்டாம் முறை விதிமீறலுக்கு ரூ.50,000/ அபராதமும், தொடர்ந்து விதிமீறும் லாரிகளை உரிய சட்ட விதிகளின் கீழ் பறிமுதல் செய்யப்பட்டு குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், விதிகளை மீறி செயல்பட்ட 16 லாரிகள் பறிமுதல் செய்யப்பட்டு குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அனைத்து கழிவு நீரகற்றும் லாரிகளிலும் GPS கருவிகள் பொருத்தப்பட்டு லாரிகளின் இயக்கங்கள் சென்னை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் செயல்பட்டுவரும் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு அறையிலும் மற்றும் அந்தந்த நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. 19.6.2023 முதல் பெருநகர சென்னை மாநகரப் பகுதிகளிலும், 30.6.2023 முதல் பிற நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் பொதுமக்கள் 14420 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு உரிமம் பெற்ற கழிவு நீர் வாகனங்களுக்கு உரிய கட்டணங்களை செலுத்தி பதிவு செய்யும் முறை மூலம் இதுவரை 838 கழிவுநீர் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**வழிகாட்டும் நெறிமுறைகள் வெளியீடு!**

தூய்மைப் பணிகள் மேற்கொள்ளும்போது ஏற்படும் உயிரிழப்புகளை தவிர்க்கும் பொருட்டு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை (நிலை) எண்.183, நாள் : 31.12.2022 மூலம் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

மனிதக் கழிவுகளை அகற்றும் தொழில் புரிவோர் தடுப்பு மற்றும் அவர்களது மறுவாழ்வு சட்டம் 2013, பிரிவு 7ன்படி, எந்தவொரு நபரும், ஒப்பந்ததாரரும் அல்லது எந்தவொரு நிறுவனமும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவொரு நபரையும் அபாயகரமான முறையில் கழிவுநீர் தொட்டியை சுத்தம் செய்வதற்கு ஈடுபடுத்தவோ அல்லது பணியமர்த்தவோ கூடாது. அவ்வாறு ஈடுபடுத்தினால், அந்த நபரின் மீது மேற்படி சட்டத்தின் பிரிவு 9ன்படி முதன் முறையாக மீறுபவர்களுக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை அல்லது 2 லட்சம் ரூபாய் அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும். இரண்டாவது முறையாக மீறுபவர்களுக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை அல்லது 5 லட்சம் ரூபாய் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும். இது தொடர்பான விழிப்புணர்வு பணிகள் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுகுறித்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வகையில் 17.06.2023 அன்று அனைத்து தமிழ் / ஆங்கில நாளிதழ்களில் தமிழ்நாடு முழுவதும் விளம்பரங்கள் வெளியிடப்பட்டது.

தமிழ்நாட்டில் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் பாதாள சாக்கடை மற்றும் கழிவு நீர்த் தொட்டிகளை சுத்தம் செய்வதற்கு மொத்தம் 770 இயந்திரங்கள் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மனிதக் கழிவுகளை அகற்றும் தொழில் புரிவோர் தடுப்பு மற்றும் அவர்களது மறுவாழ்வு விதிகள் 2022ன்படி சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ரூ.64 இலட்சம் மதிப்பீட்டில் பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் கழிவு நீரகற்றும் சேவைகளைப் பெறுவதற்காக சென்னை குடிநீர் வாரியத்தின் மூலம் செயலி (App) உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளது.

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் நவீன பகுதி தானியங்கி கழிவுநீர் தடை அகற்றி இயந்திரம் (Sewer Croc) மூலம் கழிவுநீர் பிரதான குழாய்களில், கழிவு நீர் செல்ல தடையாக இருக்கும் கசடுகள், மரவேர்கள் மற்றும் கழிவு அடைப்புகளை நவீன முறையில் நீக்குவதற்கு 8 எண்ணிக்கையிலான நவீன பகுதி தானியங்கி கழிவுநீர் தடை அகற்றும் இயந்திரம் தற்பொழுது கொள்முதல் செய்வதற்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தூய்மைப் பணிகள் முறையான வழிகாட்டு நெறிமுறைகளைக் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டும். உரிய அனுமதி மற்றும் பாதுகாப்பு உபகரணங்களின்றி விதிகளை மீறி கழிவு நீரகற்றும் பணிகளில் தூய்மைப் பணியாளர்களை ஈடுபடுத்தும் உரிமையாளர் / ஒப்பந்ததாரர் / பணி அமர்த்துபவர் மீது உரிய சட்ட விதிகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சென்னை குடிநீர் வாரியம் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் கழிவு நீர் அமைப்புகளை சுத்தம் செய்யும் பணிகளை முற்றிலுமாக இயந்திரங்களை கொண்டு மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சில தனியார் வீட்டு உரிமையாளர்கள் தன்னிச்சையாக கழிவுநீர் அகற்றும் பணியில் எந்தவித பாதுகாப்பு உபகரணங்களுமின்றி நேரடியாக ஈடுபடுத்தி உயிரிழப்பு ஏற்பட காரணமாகின்றனர். அச்சமயத்தில் சென்னை குடிநீர் வாரியமோ மற்ற நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளோ சம்மந்தப்பட்ட வீட்டு உரிமையாளர் மீதோ அல்லது அப்பணியில் ஈடுபடுத்தியவர் மீதோ, மனிதக் கழிவுகளை அகற்றும் தொழில் புரிவோர் தடுப்பு மற்றும் அவர்களது மறுவாழ்வுச் சட்டம், 2013, பிரிவு 7 மற்றும் 9ன் கீழ், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, உரிய குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை தெரிவித்துள்ளது.



நாகர்கோவில் மாநகராட்சி 49 வது வார்டுக்குட்பட்ட C.T.M. புரம் குறுக்கு தெருக்களில் ரூபாய் 1 கோடி 67 லட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணியினை நேற்று (14.08.2023) குமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் மாநகராட்சி பொறியாளர் பாலசுப்பிரமணியம், துணை மேயர் திருமதி. மேரி பிரின்ஸி லதா, தொழில்நுட்ப அலுவலர் திருமதி. தேவி, மாமன்ற உறுப்பினர் ஜெயவிக்ரமன், தி.மு.க. மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப. ஆனந்த் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# விருதுநகர் மாவட்டத்தில் ரூ.3.55 லட்சம் மதிப்பில் மருத்துவக் கட்டடங்கள்!

## அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் - மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தனர்!

விருதுநகர், ஆக. 15-

விருதுநகர் வட்டம், செங்குன்றாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மூலம் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார் , விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் , இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் தங்கபாண்டியன் , சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.ரகுராமன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில், ரூ.25 இலட்சம் மதிப்பில் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை புதிய இரத்த வங்கி கட்டடம், 4 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ.170 இலட்சம் மதிப்பில் புதிய கட்டடம், 6 துணை சுகாதார நிலையங்களில் ரூ.160 இலட்சம் மதிப்பில் புதிய கட்டடம் என மொத்தம் ரூ.355 இலட்சம் மதிப்பிலான புதிய கட்டடங்களையும், விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள படுக்கை புண் சிகிச்சை பிரிவு, தீவிர நுரையீரல் சிகிச்சைப் பிரிவு கட்டடங்களையும் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (14.08.2023) பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கான மருந்து பெட்டகம், ஊட்டச்சத்து பெட்டகம், பரிசு பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டத்தின் கீழ் மாணவர் களுக்கு மூக்கு கண்ணாடிகள், காச நோயாளிகளுக்கான மருந்து பெட்டகம், பிரசவித்த தாய்மார்களுக்கு தாய் மற்றும் சேயுடன் கூடிய புகைப்படத்துடன் தாய் சேய் நலப்பெட்டகம், பிறப்புச் சான்றிதழ் உள்ளிட்டவற்றை அமைச்சர்கள் வழங்கினார்கள்.

பின்னர், மேம்படுத்தப்பட்ட கன்னிச்சேரி புதூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நோயாளிகள் மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கான மருத்துவ வசதிகள் குறித்த விழிப்புணர்வு கையேட்டினை அமைச்சர் பொதுமக்களுக்கு வழங்கினார்

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் தெரிவித்ததாவது : -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு எண்ணற்ற திட்டங்களை பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையின் மூலம் பொதுமக்களுக்கு மருத்துவ சேவை யாற்றி வருகிறது. மேலும், மருத்துவக்கட்டமைப்பை உருவாக்கவும், மேம்படுத்தவும் பல்வேறு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டு வருகிறது.

அதன்படி, திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் ரூ.25 இலட்சம் மதிப்பில் புதிய இரத்த வங்கி கட்டடமும், ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ள செங்குன்றாபுரத்தில், ரூ.25 இலட்சம் மதிப்பில் பிரசவ பின் கவனிப்பு பிரிவு கட்டடமும், ஜமீன்கொல்லங்கொண்டானில் ரூ.60 இலட்சம் மதிப்பில் புறநோயாளிகள் பிரிவு கட்டடமும், உப்பத்தூரில் ரூ.60 இலட்சம் மதிப்பில் புறநோயாளிகள் பிரிவு கட்டடமும், எரிச்சநத்தத்தில் ரூ.25 இலட்சம் மதிப்பில் செவிலியர் குடியிருப்பு கட்டடமும், பாறைப்பட்டி மற்றும் இராமசாமிபுரம் கிராமத்தில் தலா ரூ.20 இலட்சம் மதிப்பிலும், கோட்டூர், பெரிய பேராலி, வி.முத்துலிங்கபுரம், ஒத்தையால் ஆகிய 4 இடங்களில் துணை சுகாதார நிலைய கட்டடங்களும், என மொத்தம் ரூ.3.55 கோடி மதிப்பில் 11 புதிய மருத்துவ கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும், அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை மாவட்ட அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு ரூ.36 கோடி மதிப்பில் கூடுதல் கட்டடங்களும், ராஜபாளையம் அரசு மருத்துவமனையை மாவட்ட அரசு மருத்துவமனைக்கு இணையாக மேம்படுத்த ரூ.40 கோடி மதிப்பில் கூடுதல் கட்டடங்களும், சாத்தூர் அரசு மருத்துவமனையில், ரூ.3.71 கோடி மதிப்பில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு(TAEI) கட்டடமும், பல்வேறு இடங்களில் ஆரம்ப மற்றும் துணை சுகாதார நிலையங்களில் புதிய கட்டடங்கள் என ஆக மொத்தம் ரூ.81.02 கோடி மதிப்பில் மருத்துவ கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

மாவட்டத்தில், 7 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், சிவகாசி மாநகராட்சி, அருப்புக்கோட்டை மற்றும் திருவில்லிபுத்தூர் நகராட்சிகளில் தலா 1 நகர்ப்புற நலவாழ்வு மையங்களும், இராஜபாளையம் நகராட்சியில் 2 நகர்ப்புற நலவாழ்வு மையங்களும் என மொத்தம் 5 மையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், சிவகாசி மாநகராட்சி மற்றும் விருதுநகர் நகராட்சியில் தலா 1 நகர்ப்புற நலவாழ்வு மையம் என 2 மையங்கள் விரைவில் திறக்கப்பட உள்ளன. மாவட்டத்தில் இலுப்பையூர் மற்றும் செம்பட்டி பகுதிகளில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பதற்கான கட்டடப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சிவகாசி அரசு மருத்துவமனையில் ரூ.25 கோடி மதிப்பில், 50 படுக்கைகள் கொண்ட பன்னோக்கு தீவிர சிகிச்சைப்பிரிவு கட்டடமும், திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் ரூ.5.60 கோடி மதிப்பில் கூடுதல் கட்டடமும், ரூ.2.50 கோடி மதிப்பில் புதிய சி.டி. ஸ்கேன் கருவி அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

விருதுநகர் மாவட்டத்தில் மிக சிறப்பான மருத்துவ கட்டமைப்பு ஏற்கனவே இருந்து வருகிறது. அனைத்து மருத்துவமனைகளிலும் பிரசவங்கள், தாய் மரண விகிதம் உள்ளிட்ட பல்வேறு குறியீடுகளில் பெரிய அளவில் சிறப்பு பெற்ற மருத்துவமனையாக இருந்து வருகிறது.

விருதுநகர் மாவட்டத்தில் கல்லூரணி, முஷ்டகுறிச்சி, ஜமீன் கொல்லங்கொண்டான், எம்.புதுப்பட்டி மற்றும் ராஜபாளையம் ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகள் National Quality Assurance Standards சான்றிதழ்களையும், ராஜபாளையம், சாத்தூர், சிவகாசி, அருப்புக்கோட்டை ஆகிய 4 ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகள் Labour Room Quality Improvement Initiative சான்றிதழ்களையும் பெற்றிருக்கின்றன.

ஒன்றிய அரசால் கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் அறிவிக்கப்பட்டு வரும், இலக்ஷயா சான்றிதழில் தமிழ்நாடு இதுவரை 77 சான்றிதழ்களை பெற்றுள்ளது. இதில் கடந்த ஆண்டு மட்டும் 43 இலக்ஷயா சான்றிதழ்களை தமிழ்நாடு பெற்றிருக்கின்றது. அதுபோல நேஷனல் குவாலிட்டி அசுரன் ஸ்டாண்ட் சான்றிதழை பொறுத்தவரை 2013 இல் இருந்து நடைமுறையில் இருக்கிறது. இதுவரை தமிழ்நாடு ஒட்டு மொத்தமாக 478 சான்றிதழ்களை பெற்றிருக்கின்றது. இதில் கடந்த ஆண்டு மட்டும் 239 சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. சுமார் 50 சதவீத சான்றிதழ்கள் ஒரு ஆண்டில் பெறப்பட்டு இருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த மருத்துவத் துறையை சிறப்பாக வழி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். விருதுநகர் மாவட்டம் மக்களைத் தேடி மருத்துவம் என்ற மகத்தான திட்டத்தில் 2,61,828 முதல் சேவை பெட்டகங்களையும், 8,28,971 தொடர் சேவை பெட்டகங்களையும் வழங்கி இத்திட்டத்தில் 100 சதவிகித இலக்கை நோக்கி மற்ற மாவட்டங்களுக்கு முன்னுதாரணமாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என தெரிவித்தார்.

முன்னதாக தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் விரைவில் தொடங்கப்படவுள்ள " Health Walk" திட்டத்தின் கீழ், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன்., தலைமையில், அமைச்சர் மா. சுப்பிரமணியன் , 8 கிலோ மீட்டர் தூரம் நடைபயிற்சி மேற்கொள்வதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தினை உறுதிபடுத்துவதற்காக ஆய்வு செய்து நடைபயிற்சி மேற்கொண்டார். இந்நிகழ்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாச பெருமாள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.தண்டபாணி ஆகியோர் இருந்தனர்;.

மேலும், அழகாபுரி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று, மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மருந்துகள், அங்கு வழங்கப்படும் சிகிச்சைகள், மருத்துவர்களின் வருகை குறித்தும், நாய்க்கடி, பாம்புக்கடி மூலம் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அதை தடுக்கும் வழிமுறைகள் குறித்தும், அதற்கான மருந்துகளின் இருப்பு குறித்தும் கேட்டறிந்து ஆய்வு செய்தனர்.

இந்நிகழ்ச்சிகளில் அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.சங்குமணி, இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) (பொ) மரு.மாரியப்பன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு. யசோதாமணி, விருதுநகர் நகர்மன்றத்தலைவர் .ஆர். மாதவன், சாத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர் நிர்மலா கடற்கரை ராஜ், சிவகாசி ஊராட்சி ஒன்றியக்குழுத் துணைத்தலைவர் திரு.விவேகன்ராஜ், வட்டார மருத்துவ அலுவலர் ஆரோக்கிய ரூபன்ராஜ் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.